செ.வெ.எண் : 13/ ஆகஸ்ட்  நாள் : 08.08.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**உள்நாட்டு மீன்வளம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பயனாளிகள் விண்ணப்பிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் 2021-22ன் கீழ் தமிழ்நாட்டில் மீன்வளர்ப்பினை விரிவுபடுத்திட மானியம் வழங்கும் திட்டத்தில் (Subsidy assistance for expansion of fish culture in Tamilnadu) ஒரு ஹெக்டேர் நீர்பரப்பில் (2.47 ஏக்கர்) புதிய மீன்வளர்ப்பு குளம் அமைப்பதற்கு ரூ.7 இலட்சத்தில் 50% மானியமாக ரூ.3.50 இலட்சம் மற்றும் ஒரு ஹெக்டேர் நீர்பரப்பில் மீன்வளர்ப்பு செய்திட ஆகும் உள்ளீட்டு செலவினம் ரூ.1.50 இலட்சத்தில் 40% மானியம் ரூ.60,000 (பின்னேற்பு மானியமாக Back ended subsidy) அளிக்கப்படும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதில், 0.25 ஹெக்டேர் முதல் 1 ஹெக்டேர் வரை உள்ள பரப்பில் மீன்வளர்ப்பு குளம் அமைக்க விருப்பம் உள்ள உள்நாட்டு மீனவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மீன்வளர்ப்பு குளங்கள் புதியதாக அமைக்க பயனாளி சொந்த நிலம் அல்லது 5 வருட குத்தகைக்கு பெற்று நிலம் வைத்திருக்க வேண்டும். முதலில் வருபவருக்கு முன்னுருமை அடிப்படையிலும் தகுதியின் அடிப்படையிலும் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள். புதிய மீன்வளர்ப்பு குளம் அமைத்து மீன்வளர்ப்பில் ஈடுபட ஆர்வமுள்ள உள்நாட்டு மீனவர்கள் இராமநாதபுரம் (வடக்கு) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் தொடர்புகொண்டு விண்ணப்பங்கள் பெற்று இத்திட்டத்தின் கீழ் பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
உதவி இயக்குநர்அலுவலக முகவரி:
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
உதவி இயக்குநர் (வடக்கு) ,
ஒருங்கிணைந்த மீன்துறை அலுவலக கட்டடம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
இராமநாதபுரம் - 623503

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**